JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 200/2017 |
| | : | Prosecution P.W –2 |
| NAME | : | Dennison |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 17.05.2022.

முதல் விசாரணை

நான் குறும்பலபேரியில் குடியிருந்து வருகிறேன், நான் கூலி வேலை செய்து வருகிறேன், எனக்கு எதிரிகள் பிரேமா மற்றும் ஜான் பிரிட்டோவை தெரியும். கடந்த 5 வருடங்களுக்கும் முன்பு நானும் என்னுடைய நண்பர் கென்னடியும் பாவூர்சத்திரம் இரயில்வே ஸ்டேசன் பக்கம் வேலைக்கு சென்றுக்கொண்டிருக்கும் போது போலிசார் பிரேமா மற்றும் ஜான் பிரிட்டோவையும் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். பிரேமா போலிசாரிடம் பிரபாகரன் என்பவர் வீட்டில் பாத்ரூம்மில் இருந்த சாவியை எடுத்து அவருடைள பெட்ரூம்க்கு சென்று பரணில் இருந்து ஜான்பிரிட்டோவும் தானும் ஐந்து லட்சத்திற்கு மேல் பணத்தை எடுத்தாக சொல்லி, இருவரும் ஆளுக்கு பாதியாக பங்கு வைத்து கொண்டோம் என்று சொல்லி, அப்போது காலை 08.30 மணி இருக்கும் பிரேமா துணிப்பையில் இருந்து ரூபாய் 260000/- வும் சொச்சம் உள்ள பணத்தை எடுத்து போலிசாரிடம் கொடுத்தார். போலிசார் அதை அத்தாட்சி பிறப்பித்து

கைப்பற்றினார்கள், ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நானும் கென்னடியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம், அந்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவதுதான், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ,சா,ஆ,2 ஆக குறியீடு செய்யப்படுகிறது, அந்த அத்தாட்சி அ,சா,ஆ,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய 11.00 மணியளவில் எதிரி ஜான்பிரிட்டோவை போலிசார் விசாரித்தார்கள். அப்போது எதிரி ஜான் பிரிட்டோ தானும் பிரேமாவும் பிரபாகரன் வீட்டில் திருடியதாக ஒப்புக்கொண்டு பணத்தை பங்கு வைத்து கொண்டதாக போலிசாரிடம் சொன்னார்கள். மேற்படி பணத்தை போலிசாரிடம் அவர் ஒரு பையில் இருந்து எடுத்து ரூபாய் 300000/- எடுத்து ஆஜர் செய்தார், அதை போலிசார் எழுதிக்கொண்டு. அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நானும் கென்னடியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம், அந்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவதுதான், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ,சா,ஆ,4 ஆக குறியீடு செய்யப்படுகிறது, அந்த அத்தாட்சி அ,சா,ஆ,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

( எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).